(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 1,704,04,96,000/–, மூலதனக் கணக்கில் ரூ. 4,571,72,13,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ. 177,00,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16–4–2013) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

71. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 26–6–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 27–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2013 ஏப்ரல் 15]

72. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 28–11–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 63–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

73. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

108. மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

109. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கம், 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

110. சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)

111. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)

*****